**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலன் – சென்னை, மாநிலக் கல்லூரி – செவித்திறன் குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகளுக்கு பி.காம்., மற்றும் பி.சி.ஏ., பட்டப்படிப்பு வகுப்புகள் நடத்தும் திட்டம் – 2014–2015 ஆம் நிதியாண்டிற்கு திட்டத் தொடராணை மற்றும் ரூ.4.57 இலட்சம் நிதி ஒப்பளிப்பு – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை**

**அரசாணை (1 D) எண்.35** **நாள்: 27.10.2014**

**ஜய–ஐப்பசி 10, திருவள்ளுவர் ஆண்டு, 2045**

**படிக்கப்பட்டது:**

1. அரசாணை (நிலை) எண்.12, மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை, நாள் 21.11.2013.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் ந.க.எண்.3286/சிப/2013, நாள் 01.09.2014.

––––

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், சென்னை மாநிலக் கல்லூரியில், செவித்திறன் குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகளுக்கு பி.காம்., மற்றும் பி.சி.ஏ., பட்டப்படிப்பு பயிற்றுவிக்கும் மூன்று ஒப்பந்த விரிவுரையாளர்களுக்கு மாதம் ரூ.8,000/– வழங்கப்பட்டு வரும் தொகுப்பூதியத்தினை, 2013–2014 ஆம் நிதியாண்டிலிருந்து ரூ.10,000/– ஆக உயர்த்தியும், இத்திட்டத்தினை, 2013–2014 ஆம் நிதியாண்டில் தொடர்ந்து செயல்படுத்திட திட்டத் தொடராணையும், ரூ.4.57 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள், 2014–15 ஆம் ஆண்டில் இத்திட்டத்தினை தொடர்ந்து செயல்படுத்திட, மூன்று ஒப்பந்த விரிவுரையாளர்கள் மற்றும் ஒரு கணினி ஆசிரியர் பணியிடங்களில் பணியாற்றுபவர்களுக்கு தொகுப்பூதிய செலவினங்களுக்கென ரூ.4.32 இலட்சமும், சில்லறைச் செலவினங்களுக்கென ரூ.25,000/–மும், ஆக மொத்தம் ரூ.4.57 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வழங்குமாறு அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேற்படி, மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை ஆய்வு செய்த அரசு, அதனை ஏற்று, 2014–15 ஆம் ஆண்டில், சென்னை மாநிலக் கல்லூரியில் செவித்திறன் குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகளுக்கு பி.காம்., மற்றும் பி.சி.ஏ., பட்டப்படிப்பு பயிற்றுவிக்கும் மூன்று ஒப்பந்த விரிவுரையாளர்கள் மற்றும் ஒரு கணினி பகுப்பாய்வாளர் ஆகியோருக்கு தொகுப்பூதிய செலவினங்களுக்கென ரூ.4.32 இலட்சமும், சில்லறைச் செலவினங்களுக்கென ரூ.25,000/–மும், ஆக மொத்தம் ரூ.4.57 (ரூபாய் நான்கு இலட்சத்து ஐம்பத்து ஏழாயிரம் மட்டும்)

**[த.பி.பா]**

பின்வருமாறு நிதி ஒப்பளிப்பு செய்தும், இச்செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி வழங்கியும் அரசு ஆணையிடுகிறது:–

| வ. எண் | பாடப் பிரிவு | பணியாளர் விபரம் மற்றும் ஊதிய விபரம் | மொத்தத் தொகை | |
|---|---|---|---|---|
| 1. | பி.சி.ஏ., | 2 விரிவுரையாளர்கள் (ஒப்பந்த அடிப்படையில்) ரூ.10000 x 2 x 12 மாதங்கள் | ரூ.2,40,000/– | |
| 2. | தமிழ் | 1 விரிவுரையாளர் (ஒப்பந்த அடிப்படையில்) ரூ.10000 x 1 x 12 மாதங்கள் | ரூ.1,20,000/– | |
| 3. | கணினி பகுப்பாய்வாளர் | 1 விரிவுரையாளர் (ஒப்பந்த அடிப்படையில்) ரூ.6000 x 1 x 12 மாதங்கள் | ரூ.72,000/– | |
| | | | **மொத்தம்** | **ரூ.4,32,000/–** |
| **சில்லரைச் செலவினம்** | | | | |
| 1. | நூலக நூல்கள் மற்றும் பாடம் கற்பிப்பு குறுந்தகடுகள் | | ரூ.15,000/– | |
| 2. | கணினி பராமரிப்பு மற்றும் எழுதுபொருள்கள் செலவினம் | | ரூ.5,000/– | |
| 3. | கணினி துணைப் பாகங்கள் எழுதுப் பொருள்கள் செலவினம் | | ரூ.5,000/– | |
| | | | **மொத்தம்** | **ரூ.25,000/–** |
| | | | **ஆக மொத்தம்** | **ரூ.4,57,000/–** |

4. மேலே பத்தி 3–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ரூ.4,57,000/–ஐ உரிய கணக்குத் தலைப்புகளில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள வரவு–செலவு திட்ட மதிப்பீட்டிற்குள் செலவினம் மேற்கொள்ளுமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. மேலே பத்தி 3–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பில் பற்றுவைக்கப்பட வேண்டும்:–

| | | |
|---|---|---|
| (1) | 2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02 – சமூக நலன் – 101 – மாற்றுத் திறனாளிகள் நலன்– I-திட்டம் சாராதது – CJ-காது கேளாதவர்களுக்கு பட்டப்படிப்பு – 33–தொழில்முறை, சிறப்புப் பணிகளுக்குத் தொகை கொடுத்தல் – 04–ஒப்பந்த ஊதியம் (த.தொ.கு.2235–02–101–CJ-3308) | **ரூ. 4,32,000/–** |
| (2) | <u>நூலக நூல்கள் மற்றும் பாடம் கற்பிப்பு குறுந்தகடுகள்.</u> 05–அலுவலக செலவுகள் – 02–ஏனைய சில்லறைச் செலவுகள் (த.தொ.கு.2235–02–101–CJ-0525) | **ரூ.15,000/–** |

**[த.பி.பா]**

| | | |
|---|---|---|
| (3) | **<u>கணினி பராமரிப்பு மற்றும் எழுதுபொருள் செலவினம்.</u>**<br>76-கணினியும் துணைப் பாகங்களும் – 02–பராமரிப்பு<br>(து.தொ.கு.2235–02–101–CJ–7626) | ரூ.5,000/– |
| | 03–எழுது பொருள் (து.தொ.கு.2235–02–101–CJ–7635) | ரூ.5,000/– |

6. இவ்வாணை நிதித்துறையின் அ.சா. எண்.54354/நிதி(சந)/2014, நாள்16.10.2014–இல் பெறப்பட்ட இசைவின்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பொ. சிவசங்கரன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

**<u>பெறுநர்</u>**
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
மாநிலக் கணக்காயர், சென்னை–18.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.

**<u>நகல்</u>**
முதன்மைச் செயலரின் தனிச்செயலாளர், மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, சென்னை–9.
முதல்வர், மாநிலக்கல்லூரி, சென்னை–5.
நிதி (சந) துறை. சென்னை–9.
உயர்கல்வித் துறை, சென்னை–9.
இருப்பு தணிக்கை அலுவலர், தலைமைச் செயலகம், சென்னை–9.
இ. கோ./உ.ந.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.